(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 10 WITNESS FOR PROSECUTION/DEFENCE**

Name : கோவிந்தன்

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 16.2.2018

மு வி ---

நான் தற்போது தேனிமாவட்டம் ராயப்பன் பட்டியில் குடியிருக்கிறேன். டிராக்டர் மெக்கானிக்காக வேலை பார்க்கிறேன். இறந்த மணி எனக்கு மச்சான் முறை. மணி இறந்த தகவல் தெரிந்து வந்தேன். இறந்த கேதகாரியத்திற்கு வந்திருந்தேன். 2.3.17 அன்று லாவாண்யாவை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்திருந்தனர்.

நானும் தனசேகரனும் காவல் நிலையத்திற்கு போனோம். லாவன்யாவிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி பதிந்தார். லாவன்யா சொல்ல சொல்ல போலிசார் பதிந்தனர். அந்த வாக்குமூலத்தில் நானும் தனசேகரனும் கையெழுத்து போட்டோம். என்னை அழைத்து சென்றால் எமகாரே ஸ்கூட்டி வண்டி மற்றும் வெள்ளை கலர் செல்போனை எடுத்து தருவதாக லாவன்யா சொன்னார். அவற்றை லாவன்யா வீட்டில் வைத்து போலிசார் கைப்பற்றினர். லாவன்யா தந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 11. எமகாரே ஸ்கூட்டி பச்சை கலர் வண்டி, (பெண்கள் ஓட்டக்கூடியது). செல்போன் இவற்றிற்கான அத்தாட்சி அசாஆ 12. 2 சக்கர வாகனத்தை பார்த்தால் அடையாளம் தெரியும். கைப்பற்றப்பட்ட 2 சக்கர வாகனம் பதிவு எண் டிஎன் 59 பிஎல் 8822. 2 சக்கர வாகனத்தின் புகைப்படம் சா பொ 9. செல்போன் தற்போது என்னிடம் காட்டப்படுவது. சா பொ 10. ( அரசு தரப்பில் 2 சக்கர வாகனம் முற்றிலும் சேதம் அடைந்து எடுத்து வர முடியாத நிலையில் இருப்பதாக தெரிவித்தால் , 2 சக்கர வாகனத்தின் புகைப்படம் சாட்சியிடம் காட்டி படிவம் 95 உடன் சேர்த்து குறியிடப்படுகிறது). படிவம் 95 அசாஆ 13. அதே நாளில் காலை 10.30 மணிக்கு காவல் நிலையத்தில் முத்துகுமாரை வைத்து விசாரித்தனர். முத்துகுமார்

சொன்ன விவரங்களை பதிவு செய்தனர். அந்த வாக்குமூலத்தில் நானும் தனசேகரனும் கையெழுத்து போட்டோம். முத்துகுமார் தந்த வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் உழவர் சந்தை அருகில் அடையாளம் காட்டி ஒரு கத்தி மற்றும் சிகப்பு கலர் துண்டையும் எடுத்து தருவதாக சொன்னார். முத்துகுமார் தந்த வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 14. கத்தி மற்றும் சிகப்பு கலர் துண்டு எடுத்ததற்கான அத்தாட்சி அசாஆ 15. கத்தி கருப்பு கலர் உறையுடன் கூடியது சா பொ11. சிகப்பு கலர் கோடுபோட்ட ரத்தக்கறை படிந்த துண்டு சா பொ 12. எதிரிகள் லாவன்யா , முத்துகுமார் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளனர். அவர்களை எனக்கு தெரியும். என்னை போலிசார் விசாரித்தனர்.

கு வி -- எதிரிகள் தரப்பில்

எனக்கு சொந்த ஊர் ராயப்பன்பட்டி. 2.3.17 அன்று அங்கிருந்து அதிகாலை 4 .30 மணிக்கு கிளம்பினேன். என்னுடன் அண்ணன் சுருளி, பிச்சைஅண்ணன், முருகேஸ்வரி அண்ணி, இன்னொரு அண்ணி புவனா ஆக 5 பேர்கள் வந்தார்கள். நாங்கள் பேருந்தில் வந்தோம். பாத்திமா என்ற நிறுவன பேருந்தில் வந்தோம். அந்த பேருந்து கம்பத்திலிருந்து திண்டுக்கல் செல்லும் பேருந்தாகும். நாங்கள் 4.30 மணிக்கு பேருந்தில்

ஏறிவிட்டோம். ராயப்பன்பட்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து பாத்திமா பேருந்தில் காலை 4.30 மணிக்கு ஏறினோம். 4.30 மணிக்கு நான் சொல்லும்படி பஸ் பேருந்து வசதி கிடையாது என்றால் சரியல்ல. ராயப்பன்பட்டியிலிருந்து தேனியில் இறங்கி பின்பு தேனியில் இருந்து வேறு பேருந்தில் ஏறி வந்தோம். தேனியிலிருந்து மதுரைக்கு காலை 5.40 மணிக்கு ஏறினோம். மதுரை வரும் போது காலை 7.40 பேருந்து நிலையம் வந்து அடைந்தோம். பின்பு மதுரை வந்து நேரிடையாக காவல் நிலையம் வந்தோமா என்றால் ஆட்டோ பிடித்து வீட்டிற்கு சென்றோம். பின்பு வீட்டிலிருந்து கிளம்பி காவல் நிலையம் வந்தோம். வீடும் காவல் நிலையமும் அருகில் தான் உள்ளது. ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து நாங்கள் லாவன்யா வீட்டிற்கு ஆட்டோவில் செல்ல அரைமணிநேரமானது. நாங்கள் செல்லும் போது வீடு பூட்டியிருந்தது. லாவன்யா கைது செய்யப்பட்டதாக தகவல் தெரிந்து காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையம் செல்லும் போது மணி என்ன என்று தெரியாது. காவல் நிலையத்திற்குள் நானும் தனசேகரனும் சேர்ந்து போனோம். தனசேகரன் உடன் எனக்கு பழக்கமில்லை. நான் போகும் போது காவல் நிலையத்தில் லாவன்யாவை மட்டும் பார்த்தேன். உறாலில் அமர வைத்திருந்தனர். அந்த அறை நீளமாக இருந்தது. காவல்

நிலையத்தில் உள்ளே சென்றவுடன் வலது புரத்தில் தரையில் லாவன்யா அமர்ந்திருந்தார். லாவன்யா சுடிதார் அணிந்திருந்தார். என்னை பார்த்து உடன் லாவன்யா அழுதார். காவல் நிலையத்திற்குள்ளே வைத்து தான் லாவன்யா வாக்குமூலம் கொடுத்தார். காவல் நிலையத்தில் ஆய்வாளர் மற்றும் போலிசார்கள் இருந்தனர். ஆண் போலிசார் , பெண் போலிசார் எத்தனை பேர்கள் இருந்தனர் என்று தெரியாது. வண்டி மற்றும் செல்போனுக்குரிய அத்தாட்சியில் மட்டும் தான் கையெழுத்து போட்டேன். வாக்குமூலத்தில் கையெழுத்து போடவில்லை. வாகனத்தையும் செல்போன்னையும் கைப்பற்றப்பட்டது என்று அத்தாட்சியில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினர். காவல் ஆய்வாளர் கையெழுத்து வாங்கினார். பின்பு காவல் நிலையத்திலிருந்து நான் தனசேகரன், முத்துகுமார் , காவல் ஆய்வாளர் ஆகியோர் உழவர் சந்தைக்கு 2 இரண்டு சக்கர வாகனத்தில் போனோம். யார் வாகனம் ஓட்டியது யார் பின்னால் அமர்ந்து போனது என்பது எனக்கு ஞாபகமில்லை. பொருட்கள் எடுத்து தந்தது யார் என்பது எனக்கு ஞாபகமில்லை. எந்த பொருளை முதலில் எடுத்து கொடுத்தனர் என்று ஞாபகமில்லை. பின்பு காவல் நிலையம் வந்து ஊருக்கு போய் விட்டேன். எந்த விதமான

பொருட்களும் யாராலும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன படி அன்று மதுரைக்கு வரவில்லை என்றாலும் எந்த சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் சொல்லி கொடுத்து நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்வி : நான் இறந்த மணியின் இறுதி சடங்கில் கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொண்டேன்.